முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1408

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.08.2023,** திங்கட்கிழமை

(சோபகிருது வருடம் ஆடி மாதம் 22 ம் நாள்)

1. வானவர்கள் போற்றும் வள்ளலே
   வடிவேலன் என் அம்சமாக வந்த அண்ணலே
   தானதர்ம சக்தி கொண்டு உலகையே
   தனிப்பெரும் ஞான தர்ம வேலியிட்டு காக்கின்ற
2. காக்கின்ற ஆறுமுக அரங்கனே
   கருணைமிக்க ஞானியே உந்தனுக்கு
   ஆக்கமுடன் சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
3. ஆசியதும் அரங்கனுக்கு சக்தி ஊட்டி
   அகிலத்தில் அற்புதம் யானே நடத்துவேன்
   வாசி வென்ற மக்கள் படையை
   வையகத்தில் எங்கும் அரங்கன் தீட்சைகொண்டு உருவாக்குவேன்
4. ஆதலால் உலகோர் அரங்கன் தொடர்பு கூட்டி
   அறத்தில் தொடர்ந்து வந்தால் போதும்
   பூதலமெங்கும் இந்த மாற்றம்
   புண்ணிய வழியாகவே நடந்தேறும்
5. நடந்தேற அரங்கன் ஆசிபலம் வேண்டும்
   நாடெங்கும் தர்மவான்கள் பெருக
   தடையின்றி அரங்கன் தர்மம் வளரவேண்டும்
   தக்கபடி உலகோர் மாதவராஜன் அரங்கனை
6. அரங்கனை குருவாக ஏற்று உலகோர்
   அறத்தை தொடர்ந்து செய்ய வேண்டும்
   வரமாக அரங்கன் தந்த சன்மார்க்க நெறியை
   வணங்கி ஏற்று தொடர்ந்து பின்பற்ற வேண்டும்

7. வேண்டிவேண்டி அரங்கா முருகா என
விடாது உலகோர் சேவை செய்தால்
களங்கமற எங்கும் மாற்றம்
கருணைகொண்ட தர்மவான்கள் ஞானவான்கள் நிறைந்த

8. நிறைந்த பெருமைமிக்க நல்லாட்சி
நிலவுலகமெங்கும் ஞான ஆட்சியாக
வருங்காலம் கண்டு இந்த பேருலகம்
வல்லமைபட ஆறுமுகன் என் ஆசியோடு பாதுகாப்பாய் ஆளுமை காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–